# அன்னைபூபதிநினைவு நிகழ்வுகள் இன்று உணர்வுடன் அனுஷ்டிப்பு!


விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 'சித்திரை 6 இதழ் 74
யாழ்ப்பாணம் புதன்கிழமை 19-04-1995


(யாழ்ப்பாணம்)

தியாகச்சுடர் அன்னை பூபதியின் 7-ம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வுகள் இன்று தமிழீழம் எங்கும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப் படுகின்றது.

வீதிகள், காரியாலயங்கள், வீடுகள், பொது இடங்கள்

(6-ம் பக்கம் பார்க்க)

## தியாகி அன்னைபூபதிநினைவு பொதுக் கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

தியாகி அன்னை பூபதி நினைவாக இன்று யாழ்ப்பாணம் நல்லூர் சட்டநாதர் வீதி இளங்கலைஞர் மன்றம், சிட்டிபுரம் அம்மன்கோவில் முன்றல், அல்வாய் மாலிசந்திப் பிள்ளையார் கோவில முன்றல் ஆகிய இடங்களில் நினைவுப் பொதுக்கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

இரவு 8.00 மணிக்கு இந்தப் பொதுக்கூட்டங்கள் ஆரம்பமாக உள்ளன.

நினைவுரைகளும் கலை நிகழ்ச்சிகளும் இவற்றில் இடம் பெறும்.

# காலக்கெடுவை அரசு மதிக்காததால் இன்றிலிருந்து பேச்சு-மோதல் தவிர்ப்பிலிருந்து நாம் விலகிக்கொள்கிறோம்!

## - தலைவர் பிரபாகரன் சந்திரிகாவுக்கு கடிதம் -



[யாழ்ப்பாணம்]

19 ஏப்ரல் 1995 என்று நாம் விதித்த காலக்கெடுவினுள், அந்தக் கால அவகாசத்தினுள், குறிப்பிட்ட எமது கோரிக்கைகள் எதையும் நீங்கள் நிறைவு செய்யத் தவறியமையால், நாம் ஏற்கனவே தெரிவித்ததுபோல இத்திகதியிலிருந்து சமாதானப் பேச்சுக்களிலிருந்தும் மோதல் தவிர்ப்பு உடன்பாட்டிலிருந்தும் விலகிக்கொள்வதென்ற வேதனைக்குரிய முடிவை எடுத்துள்ளோம். இந்த முடிவை எடுப்பதைத் தவிர எமக்கு மாற்றுவழி எதையும் நீங்கள் விட்டுவைக்கவில்லை. இந்த துரதிர்ஷ்டமான சூழ்நிலை!குறித்து நாம் மிகவும் வருந்துகிறோம்.

தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்தக கடிதத்தின் முழு விபரம் வருமாறு:

[6-ம் பக்கம் பார்க்க]

★ தீர்வை முன்வைக்காவிட்டால்

## இலங்கை-தமிழர்க்கு ஒரு அயல் நாடாவதை தடுக்கமுடியாது

(யாழ்ப்பாணம்)

''ஜனாதிபதி சந்திரிகா அரசு தமிழர்களுக்கான தீர்வைமுன் வைக்காவிட்டால், இலங்கை, தமிழர்களுக்கு ஒரு அயல் நாடாகி விடுவதை யாராலும் தடுக்கமுடியாது'',

இவ்வாறு தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாணப் பங்குத் தந்தை கலாநிதி ஜெபநேசன் தெரிவித்துள்ளார்.

டங்குத் தந்தை ஜெபநேசன் கலாநிதி ஜெபநேசன்

இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி சந்திரிகா அரசு,

(6ம் பக்கம் பார்க்க)

## தியாகி அன்னை பூபதி நினைவாக யாழ். நகரில் நேற்று அடையாள உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

தியாகச் சுடர் அன்னை பூபதியின் 7-ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு வட பிராந்திய யாழ். ஆங்கில மருந்து வணிகர் சங்கம் மற்றும் யாழ். வணிகர் கழகம் ஆகியன நேற்று ஒரு நாள் அடையாள உண்ணாவிரதத்தை மேற்கொண்டன.

யாழ்ப்பாணம் கன்னாதிட்டி காளிகோவில் முன்றலில் நேற்றுக் காலை 7 00 மணிக்கு ஆரம்பமான இவ் அடையாள உண்ணாவிரதத்தில் யாழ்;

(6ம் பக்கம் பார்க்க)

## மாலைதீவில் தடுத்துவைக்கப்பட்ட 13 இலங்கை மீனவர் விரைவில் விடுதலை

(கொழும்பு)

கடந்த ஒரு வருட காலமாக மாலைதீவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 13 இலங்கை மீனவர்களை விடுதலை செய்வதற்கு மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கையூம் முன்வந்துள்ளார்.

மாலைதீவுக் கடற்பிராந்தியத்தில் மேற்படி மீனவர்கள் மீன் பிடித்த குற்றத்திற்காக கடந்த ஒரு வருடமாக மாலைதீவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்,

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் இந்த மீனவர்களை, அவர்களின் மீன்பிடி உபகரணங்களுடன் விடுதலை செய்வதற்கு ஜனாதிபதி முடிவு செய்துள்ளதாக மாலைதீவு உயர் ஸ்தானிகர் நேற்று கொழும்பில் தெரிவித்தார்.

வி இ

## தடைநீக்கிய பொருட்களை வடபகுதிக்கு அனுமதிக்குமாறு பாதுகாப்பு செயலர் உத்தரவு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு செல்வதற்குத் தடைவிதிக்கப்பட்ட 8 பொருட்கள் தவிர, ஏனைய பொருட்களைக் கொண்டு செல்வதற்கு அனுமதிக்குமாறு பாதுகாப்புச் செயலர் சந்திரானந்த டி சில்வா படையினருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

குறிப்பிட்ட 8 பொருட்களும் தொடர்ந்து தடை செய்யப்பட்டபொருட்களாகவே இருக்

(6-ம் பக்கம் பார்க்க)


தமிழ் ஈழ விடுதலை அகிம்சைப் போரில் உயிர்த்தியாகம் செய்த முதல் பெண்மணி நீயே!
உன் நாமம் தமிழீழத்தில் நிலைக்கட்டும்

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

111, பிரதான வீதி — யாழ்ப்பாணம்.

## உண்ணாவிரதம்

[யாழ்ப்பாணம்]

தியாகி அன்னை பூபதி 7ம் ஆண்டு நினைவாக இறுதி நாளாகிய இன்று 19ம் திகதி கோட்ட ரீதியாக வலிகாமத்தில் நல்லூர் சட்டநாதர்வீதி, இளங்கலைஞர் மன்றத்திலும் தென்மராட்சியில் சிட்டிபுரம் அம்மன் கோவில் முன்றலிலும், வடமராட்சியில் அல்வாய் மாலி சந்திப் பிள்ளையார் கோவில் முன்றலிலும் அன்னை நினைவாக அடையாள உண்ணாவிரதங்கள் நடைபெறவுள்ளன.

## சித்திர கண்காட்சி

(நெல்லியடி)

அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடந்த சித்திரக்கண்காட்சியை கரவெட்டிக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு, க, சிவராஜா திறந்துவைத்தார்.

-160

# எழுதுவினைஞருக்கு புதியசம்பள திட்டம்

(மானிப்பாய்)

எழுதுவினைஞர் சேவைக்கும் அதனோடிணைந்த சேவைகளுக்குமான சம்பள முரண்பாடுகளை நீக்குதல் சம்பந்தமான 1994 ஆகஸ்ட் 8ம் திகதிய 24/94 இல. பொது நிர்வாக சுற்றறிக்கையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது,

மேற்படி சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளத்திட்டம் நீக்கப்பட்டு 7-4-95ம திகதிய 29/94ம் (I) இலக்க புதிய சுற்று நிருபத்திற்கமைய எழுதுவினைஞர் வகுப்பு 1ல் உள்ள உத்தியோகத்தர்களுக்கு 400 ரூபா சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது

புதிய சம்பளத்திட்டம் 1-8-94 முதல் பின்வருமாறு நடைமுறைக்கு வருமென பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

(5ம் பக்கம் பார்க்க)

## புதிய செயலர்

(கொழும்புத்துறை)

புதிய பிரதேசச் செயலாளரான திரு. ச. சற்குணனந்தன் கடந்த மார்ச் மாதம் தொடக்கம் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். 154


# தமிழீழ சட்டக்கல்லூரி

## கல்வி ஆண்டு 1995 - 1996 மாணவர்களுக்கான விண்ணப்பம் கோரல்

தமிழீழ சட்டக்கல்லூரியின் மேற்படி ஆண்டுக்கான பயிற்சி விரிவுரைகள் நடைபெற இருப்பதால் இக்கல்வி நெறியைப் பயில்வதற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தகமைகளை உடைய மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

காலம்: மூன்று வருடங்கள்

கல்வித்தகைமை:

க. பொ. த. (உ/த) பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் அவற்றில் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும், க. பொ. த. சாதாரணப் பரீட்சையில் தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

வயது; 19 - 35

விண்ணப்பம் செய்ய விரும்புவோர்கள் அதற்கான விண்ணப்பப்படிவத்தை கோண்டாவில் பொற்பதி வீதியில் உள்ள நீதி நிர்வாகத்துறையில் நடுவப்பணியகம், வன்னி, மன்னர், முல்லைப் பிரதேச நீதி நிர்வாகத்துறை கிளை நடுவபபணியகம், தமிழீழ மாவட்ட நீதிமன்றுக்களின் செயலகங்கள் ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம். இவ்விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்து 30-05-1995 ம் திகதிக்கு முன்னர் கீழ்குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**நடுவப்பணியகம்**

நீதி நிர்வாகத்துறை
தமிழீழ விடுதலைப் புலிகள்
கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.

(எ 4882)


## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995—04—19**

புதன் இரவு

8-02 தியாக தீபம் அன்னை பூபதியின் 7ம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி - நல்லூர் ஈழதாசன் வில்விசைக் கலைஞர்கள் வழங்கும ''தியாகத்தாய்'' வில்லிசை.
8-30 செய்திகள்
8-40 நாடகம் - காண்டீரவி எழுதிய ''முன்னேடி''

**1995—04—20**

வியாழன் காலை

7-02 மாவீரவணக்கம்
7-15 விடுதலைக் கீதங்கள்
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச் செய்திகள்
7-40 விடுதலைக் கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995—04—19**

புதன் மாலை

5-01 சிந்தனைச் சிதறல்
5-02 எழுச்சிக்கீதம்
5-10 புதியவை
5 15 படப்பாடல்கள்
5-30 அறிவூற்று
6-00 சிந்தனைக்குச் சிலவினாடிகள்
6-02 உங்கள் தெரிவு
6-15 விளையாட்டுச் செய்திகள்
6-20 உங்கள் தெரிவு நிகழ்ச்சியின் தொடர்ச்சி
6-30 மாலைநிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.


பெண் இனத்தின ஒளி விளக்கே
பெண்ணின் பெருமையை
உயர்த்தி விட்டாயே

அன்னை பூபதியை நினைவு கூருவோம்

## ஸ்ரீ லங்கா புத்தகசாலை அன் அச்சகம்

234, கே. கே. எஸ். வீதி.
யாழ்ப்பாணம்.



உலகத் தமிழ் இனத்தை
விழிப்படையச் செய்த சாத்வீகத்தாய்
அன்னை பூபதியே!

## ஸ்ரீ சுப்பிரமணியம் புத்தகசாலை

ஸ்ரீ சுப்பிரமணியம் அச்சகம்
235. கே. கே. எஸ். வீதி.
யாழ்ப்பாணம்.



தாயக விடுதலைக்கு தன்னை அர்ப்பணித்த தியாகியே
அன்னை பூபதியை நினைவுகூரும் நன்னாள்
அனைவருக்கும் சுதந்திர உணர்வு பொங்கட்டும்!!

நகரின் நன்மதிப்புப்பெற்ற மொத்த சில்லறை வியாபாரிகள்
மொத்த விற்பனை நிலையம்:

## ஜெயா அழகுமாடம்

187, இராசன் வீதி [மின்சாரநிலைய வீதி] யாழ்ப்பாணம்
சில்லறை வியாபார நிலையம்:
187 ஏ, இராசன் வீதி [மின்சாரநிலைய வீதி] யாழ்ப்பாணம்



தியாகத்தின் விளைநிலமே
அணையாத தீபமே பூபதித்தாயே
உன் செயலை நினைவு கூருகின்றோம்

## அன்னராஜா

பல்பொருள் களஞ்சியம்
158 [356] ஆஸ்பத்திரிவீதி
யாழ்ப்பாணம்



58வது அகவையில் பெண்ணினத்திற்கு பெருமை தேடி
அணையாத தீபமான அன்னையே! பூபதி! உன் நினைவால் உறுதிகொள்கிறோம்!

# வேலணை ப. நோ. கூ. சங்கம்

யாழ்ப்பாணம்.



மண்ணுக்காக தன்னையே அர்ப்பணித்த அன்னை பூபதியே
நீ காலத்தால் அழியாத சரித்திரம்!

ஆங்கில மருந்து விற்பனையாளர்:

# குறிஞ்சி மெடிக்கல்ஸ்

பரமேஸ்வராச் சந்தி
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

# இந்தியாவைதலைகுனியவைத்த அன்னை பூபதியின் அறப்போர்



'ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் மிகப் பெரியதொரு தியாகத்தை அர்ப்பணிப்பை செய்து வானளாவிய உயரத்திற்கு உயர்ந்துவிட்டவர் தியாகி அன்னை பூபதி அவர்கள்.

விடுதலை விருட்சமாக அஹிம்சைப் போராட்டத்தின் உன்னத சக்தியாக என்றும் எம் மனக்கண்ணில் தோன்றிக்கொண்டிருப்பவர் அன்னை பூபதி. ஏழு ஆண்டுகள் கடந்தாலும் ஈழத் தமிழர்கள் உயிரோடு இருக்கும் வரை ஒவ்வொருவரின் உதடுகளும் உச்சரித்துக் கொண்டிருக்கும் உன்னத பெயர் அன்னை பூபதி.

மட்டு. மாவட்டத்திலுள்ள நாலவன் கேணி என்னும கிராமத்தில் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தவர் அன்னை பூபதி அவருடைய கிராமத்தில் தொடர்ச்சியாக இடம் பெற்றுவந்த இராணுவத்தினரின் அக்கிரமங்களையும் அநியாயத்தையும் கண்டு கொதித்தெழுந்து கொள்கை வழி நின்று போராடினர்.

போராட்டம் ஆரம்பித்த காலம் தொட்டு இன்றுவரையும் எத்தனையோ இழப்புக்களையும், வேதனைகளையும் சந்தித்துக் கொண்டிருக்கும் தமிழர்களில் பூபதி அம்மாவும் விதிவிலக்கானவர் அல்ல. ஆம். அவரது குடும்பத்தில் இரு புதல்வர்கள் சிறிலங்கா படையினரால் சுட்டுக் கொல்லப் பட்டனர். இந்த இழப்புகளும் படையினரின் நெருக்கடிகளும்

என். கே: துரை

பூபதி அம்மாவை வீரப் பெண்ணாக எழுச்சியுடன் எழச் செய்தது. இதனல் நாவலன் கேணி கிராமத்தையே கூட்டி அன்னையர் முன்னணி என்ற அமைப்பின் ஊடாக சிறிலங்கா படைகளின் அநியாயத்தையும், அக்கிரமங்களையும் தட்டிக் கேட்டார்.

சிறிலங்கா இராணுவத்துக்கு எதிராக அம்மா அவர்கள் கிளர்ந்தெழுந்த போது தான் இந்திய - இலங்கை ஒப்பந்தம் என்ற பெயரில் 1987 ஜுலை 29ம் திகதி அன்றைய சிறிலங்கா ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவிற்கும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது.

இந்த வலையில் விழுந்து விடாமல் ஈழத் தமிழர் போராட்டம் விடுதலைப் புலிகளின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருந்த போதும் இந்திய - இலங்கை ஒப்பந்தம் மூலம் இந்தியப் படைகளின் கால்கள் தமிழீழமெங்கும் பதிந்தன. அத்துடன் ஈழத் தமிழரின் போராட்டத்தினை நசுக்கும் நோக்குடன் இந்தியப் படைகள் செயற்படத் தொடங்கின. இதனல் இந்தியப் படைகளுடன் மோத வேண்டிய நிலை விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டது.

ஒரு நாள் அல்ல இருநாள் அல்ல பல நூறு நாட்கள் இந்தியப்படை - விடுதலைப் புலிகள யுத்தம் நீடித்தது. ஒரு சிகரெட் புகைத்து முடிவதற்கு முன் விடுதலைப் புலிகளை அழித்து விடலாம் என்று தப்பான கணக்கு போட்டுக் கொண்டு போரிட வந்த இந்திய இராணுவத்தின் பல தலைகள் கொய்யப்பட்டன.

இதனல் ஆத்திர பட்ட இந்தியா மீண்டும் மீண்டும் தனது படைகளைக் குவித்து ஈழத் தமிழரை அடக்கியொடுக்கி அடிமைப்படுத்த நினைத்தது. இதனல் சுதந்திர தாகத்துடன் எழுந்து நின்று 'புலிகளுடன் யுத்த நிறுத்தம் செய்யுங்கள், புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துங்கள்' என்று இந்திய அரசுக்கு கோரிக்கைகளை விடுத்து 1988ம் ஆண்டு பங்குனி மாதம் 19ம் திகதி மட்டு. அமிர்தகழி மாமாங்க பிள்ளையார் ஆலய வளவில் சாகும் வரை உண்ணுவிரதப் போரில் குதித்தார் அன்னை பூபதி அம்மா அவர்கள்

ஒரு மாதம் வரை உணவு எதுவுமின்றி தனது இலட்சியத்தில் விலகாது நின்று போராடினர். உணர்விழந்து நாவரண்டு உடல் மெலிந்த போதும் அம்மா தனது அகிம்சைப் போரைத் தொடர்ந்தார். இந்திய அரசு அம்மாவின் போராட்டம் குறித்து மௌனம் சாதித்தது.

அன்னை அவர்களின் இந்தப் பற்றுறுதியான போராட்டத்தினல் உலகில் இந்தியாவிற்கு தலைகுனிவு ஏற்பட்டது. இதனல் இப்போராட்டத்தை தடுத்து நிறுத்தும் நோக்குடன் அம்மா அறப்போர் நடத்திய மேடைக்கு வந்து உண்ணவிரதத்தை நிறுத்துமாறு மருட்டியும், வெருட்டியும் பார்த்தனர். அம்மா அசையவில்லை, மனம் இழக்கவில்லை. தனது இலக்கில் குறியாக நின்றர் இதனல் மேலும் ஆத்திரமடைந்த இந்தியப் படையினர் அம்மாவின் மேடைக்கு அருகில் நின்று துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்து அம்மாவிற்கு உதவியாக இருந்தோரை விரட்டி வந்தனர். ஆனல் பூபதி அம்மா இவற்றுக்கெல்லாம் அஞ்சவில்லை.

உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே என்று இந்திய இராணுவத்தை துச்சமாக மதித்தார் அம்மா.

அன்னையின் சத்தியப்போர் பட்டி தொட்டியெங்கும் பரவியது மக்கள் அலைகடல்வெள்ளமெனதிரண்டெழுந்து அன்னைக்கு ஆதரவு அளித்தனர். இந்த மக்கள் வெள்ளத்தை துப்பாக்கியினல் தடுத்து நிறுத்த முயன்ற இந்திய இராணுவம் தோல்வி கண்டது.

இந்திய அரசின் போலி முகத்திரையை கிழித்தெறிய வைத்து அன்னை பூபதி தனது 58-வது வயதில் தனது கோரிக்கைகள் எதுவும் நிறைவேருத நிலையில்ஆகுதியானர்.

ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு புது அத்தியாயமாக அன்னை பூபதி அவர்களின் இந்த போராட்டம் அமைந்து விட்டது. ரி

---

## மணிவாக்கு

வெளித்தோற்றம் சரியாக தோற்றுவதால் நாம் பலவேளைகளில் அதைக்கண்டு ஏமாந்து விடுகிறோம்.

. ஹோரஸ்

---

## நமது நோக்கு

### அன்னையின் நினைவாக

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் வளர்ச்சியடைந்து உலகத்தவர்களின் அனுதாபத்தைப் பெற்றுள்ளது என்பதை எவரும் மறுக்க முடியாது.

இந்தநிலை எப்படி ஏற்பட்டது? தமது உயிரையே துச்சமென மதித்து சமூக விடுதலைக்கும் மேம்பாட்டுக்குமான உயர் இலட்சியத்தோடு செயற்பட்ட தியாகிகளின் அரும் பணியே!

அந்த வகையில் உண்ணுவிரதமிருந்து உயிர்த்தியாகம் செய்த அன்னை பூபதியின் நினைவு தமிழீழத்தின் வரலாற்றில் என்றும் நிலைத்து நிற்கும்.

அவரின் நினைவு கூடிக் கலைந்து போகும் விழா நிகழ்ச்சியாக மாத்திரம் அமையாது பல்வேறு உறுதியான செயற்பாடுகளோடு அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

விசேடமாக அவரின் நினைவாக பாடசாலைகள் தோறும் பொது அறிவுப் பரீட்சை நடாத்தப்பட்டுப் பரிசில்கள் வழங்கப் படுகின்றன.

இன்றைய மனித வாழ்வுக்குக் கல்வி அறிவு இன்றியமையாதது

ஆனல் அது வெறும் ஏட்டுக்கல்வியாக பாட நூல்களையே பார்க்காது பாடக்குறிப்புகளோடு மாத்திரம் பெறப்படும் அறிவாக இருந்தால் அது வாழ்வுக்கு வழிகாட்டுமா?

'நுண்மாண் நுழைபுலம்' என அறிவைக் குறிப்பிடுகிறர் திருவள்ளுவர். பரந்துபட்ட பொதுஅறிவையே 'மாணறிவு' என்கிறர்,

முழு மனிதர்களாகநாம் வாழவேண்டுமாயின் பல தரப்பட்ட செய்திகளைப் படித்தும் கேட்டும் நமது அறிவுப் பரப்பை அதிகரிக்கவேண்டும்.

அன்னைபூபதி போன்றோர் தியாகத்தால் உருவாகப் போகும் புதிய சமுதாயத்தில் அல்லாத குருடர்களும், கேட்டுப் பயன் பெருத செவிடர்களும் இருக்கலாமா?

பரீட்சை நோக்கோடு குறிப்பிட்ட பாட வட்டத்திற்குள் நிற்கும் மாணவச் சமுதாயத்திற்குப் பொது அறிவுப்பரீட்சை பெரிதும் உதவும் எனநம்புகிறோம்.

பல்துறைசார்ந்த நூல்களை வாசிக்கவும் உலக நிகழ்ச்சிகளைக் கிரகித்து 'உலகம் எவ்வது உறைகிறது' என்பதை உணரவும் இப்பரீட்சை உந்து சக்தியாக விளங்கும்,

அன்னை பூபதியின் நினைவாக அறிவுக்கண் திறக்கப்படுவது போற்றற்குரியதே!

---

## மனிதாகுலம் மறக்காதம்மா

இந்திய இராணுவத்தின் கொடுமைகளால்
இங்குள்ள தமிழர்படும் அவலங்கண்டு
சிந்தையிலே மானத்தின் உணர்வு பொங்க
திடசித்தங் கொண்டவரை எதிர்க்கவெண்ணி
பந்தியிலே யமர்ந்திருந்து விரதங்காத்து
பசிதாகம் சகித்துடலை ஒறுத்துக்கொண்டு
சிந்தியநீர் கண்ணிழிந்து குளமாய்த்தேங்க
உன்னுயிரால் எம்மானங் காத்தாய் தாயே

அகிம்சையின் பிறப்பிடமாம் பாரதமே
அதிசயித்து அலமந்து ஏங்கி நிற்க
அகிலமெலாம் உறையுந்தமிழ் மக்களுன்னை
கண்ணீரின் சாயலிலே பார்த்துநிற்க
முகிலுறையும் நீரெல்லாம் ஒன்ருய்க்கூடி
முழுமாரி பெய்தென்ன இரைந்துதள்ள
மகிமைகளுள் நீ புகுந்தாய் தாயேயுன்னை
மனிதகுலம் ஒருபோதும் மறக்காதம்மா

'மாரீசன்'

---

## பெண்ணிவள் உண்ணு நோன்பு பேசுதற் கெளிதோ அம்மா

தன்னையே அழித்தாள் எங்கள்
தாயவள் பூபதி அன்னை
அன்னவள் தியாகம் கண்டு
அவனியே வியந்த தம்மா
தன்னரும் தமிழீ ழத்தைத்
தன்னுயிர் கொடுத்துக் காத்த
பெண்ணவள் உண்ணு நோன்பு
பேசுதற் கெளிதா அம்மா

— வ. யோகானந்தசிவம்.

---

## 'புயலெனவே கிளர்ந்தாய் பூபதியே'

ராகம்: ஸிம்கேந்த்ரமத்யமம் தாளம்: ஆதி

பல்லவி

பூந்தென்றலா யிருந்தாய் பூபதியே - கொடும்
புயலெனவே கிளர்ந்தாய் பூபதியே - அம்மா! (பூந்...)

அனுபல்லவி

செந்தமிழ் ஈழத்தின் உயர்தவத்தால் - அன்று
தென்தமிழ் ஈழத்தில் உதித்தவளே - தாயே! (பூந்...)

சரணம்

செந்தமிழ் நலம்மீட்கத் துடித்தெழுந்தாய் - இனம்
வெந்திடும் துயர்கண்டு கொதித்தெழுந்தாய் - மனம்
நொந்திடும் நிலையோட்டத் துணிந்தெழுந்தாய்- உடன்
செந்தமிழ் நிலம்மீட்கக் கொதித்தெழுந்தாய்- அம்மா
(பூந்...)

உறவினைத் துறந்தன்று குரல்கொடுத்தாய் - தமிழ்
உணர்வினிற் கிளர்ந்தன்று சமர்தொடுத்தாய்-எந்த
உணவையும் மறந்தன்று போர்தொடுத்தாய் - தமிழ்
உள்ளங்கள் துதிசெய்யும் பேறடைந்தாய்-அம்மா
(பூந்...)

-சரவணன்

---

தியாகத்தின் உறைவிடமே அன்னை பூபதியே
மலர மறந்தது ஏனோ!

சிவன் ஸ்ரோர்ஸ்

பரமேஸ்வராச் சந்தி — திருநெல்வேலி

ஈழத் தமிழ் நெஞ்சங்களின் அணையா தீபம்
அன்னை பூபதியின் நாமத்திற்கு
எங்கள் இதய அஞ்சலி!

கண்ணன் லொட்ஜ்

[சைவ உணவகம்]

பரமேஸ்வராசந்தி — யாழ்ப்பாணம்

உயிர் கொடுத்த அன்னையே!
உன் திருநிழலை இனிக் காண்போமா
தாயே பூபதியே!

குபேரன் களஞ்சியம்

358. ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

# தமிழரின்பண்பாடுபாரம்பரியம் தமிழீழத்தில் பேணப்படுகிறது

(உடுப்பிட்டி)

தமிழகத்தில் கோடிக் கணக்கான தமிழர்கள் வாழ்கின்ற போதிலும், தமிழீழத்தில் தமிழர்களுடைய பாரம்பரிய கலை, கலாசார, பண்பாடுகள் பேணப்படுவதுபோல அங்கு பேணப்படவில்லை. அங்கு அந்நிய கலாசாரம் பரவி தமிழரின் கலாசாரங்களை அழிய வைக்கின்றன.

புத்தாண்டு தினக் கொண்டாட்டங்கள் மருதனார்மட இராமநாதன் கல்லூரியில் நடைபெறறபோது சிறப்புரையாற்றிய யாழ்ப்பாண மாவட்ட நீதி நிர்வாகத்துறை பொறுப்பாளர் திரு. பரா மேற்கண்டவாறு கூறினார்.

உடுவில் பிரதேச சபையினரால் பிரதேச செயலர் திரு. ஆ. மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. பரா மேலும் கூறியதாவது:

எம்முடைய கலை, பண்பாட்டுக் கொண்டாட்டங்களுள் இதுவும் ஒன்று. தமிழர்களுடைய பண்பாட்டு விழுமியங்கள் தமிழீழத்தில் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

தமிழீழத்துக்கு வெளியே உலகநாடுகள் பலவற்றில் செறிந்து வாழும் தமிழ்மக்கள் எமது பாரம்பரிய கலைகள், கலாசாரங்கள், பண்பாட்டு விழுமியங்களை பாதுகாத்து வளர்க்க வேண்டும்.

எமது நாட்டில் இவைகள் அழிந்து போகாது, சுதந்திரமாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் நாம் போராட்டம் நடத்துகின்றோம்.

எமது போராட்டத்தை இல்லாதொழிக்க அரசாங்கம் பல பொய்யான வாக்குறுதிகளை வழங்குகின்றது. எமது போராட்டம் எமது உரிமைகளை விட்டுக்கொடுக்காத வகையில் நடத்தப்படுகின்றது.

இவற்றை பாதுகாப்பதற்காக செய்யப்பட்ட போராட்ட அர்ப்பணிப்புகள், மாவீரர்

## பரா உரை

களுடைய இலட்சியங்கள் வீண்போகாத வகையில் இந்த நாட்டில் சுதந்திரமாக, முழுமையான உரிமைகளைப் பெற்று, தாயகத்தை ஏற்படுத்த நாம் வழிசெய்யவேண்டும்.

அதற்கு இதுபோன்ற நிகழ்வுகள் அவசியம். இவை எமது கைகளைப் பலப்படுத்தும் ஒரு செயலாக அமைய வேண்டும். 109 - சி

யாழ். செயலகத்திற்கு

# பெறுமதி வாய்ந்த முத்திரைகள் வந்தன

(மானிப்பாய்)

யாழ் செயலகத்தில் மீண்டும் பெறுமதி வாய்ந்த முத்திரைகள் விற்பனைக்கு வந்துள்ளன. செயலகத்திலுள்ளசிறுப்பர் அலுவலகத்தில் கடந்த 84 ம்ஆண்டுகளுக்கு முன்னர் சகல தரத்திலுமுள்ள முத்திரைகள் விற்பனை செய்யப்பட்டு வந்தன. பின்னர் ஏற்பட்ட நிர்வாக சீர்குலைவு காரணமாக விநியோகம் செய்வது நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. தற்போது யாழ் அரச அதிபரின் முயற்சியினால் 500ரூபா 1000ரூபா பெறுமதியுடைய முத்திரைகள் கொழும்பிலிருந்து பெறப்பட்டு மக்களின் அன்றாட தேவைக்கு விற்பனை செய்யப்படுகின்றது 71-சி

# இரியால சு. க. அமைப்பாளர் கத்திக் குத்துக்குப் பலியானார்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கிரியால அமைப்பாளரும் இப்பகமுவ பிரதேசசபையின் எதிர்க்கட்சித்தலைவருமான திரு, பிறின்ஸ்மாலு கமுவ இனந்தெரியாதோரின் கத்திக்குத்துக்கு இலககாகி பலியானார்.

தமது வீட்டிலிருந்து ஒரிடத்திற்கு சென்றுகொண்டிருக்கையில் இவரை வழிமறித்த கோஷ்டி இவருடன் பலத்த வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகவும் பின் அக்கோஷ்டி அவரை கடுமையாக தாக்கியதுடன் கத்தியால் குத்தி கொலை செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கத்திக்குதது காயங்களுடனும் அடிகாயங்களுடனும் வீதியோரத்தில் கிடந்த இவரை ஆஸ்பத்திரிக்கு உடனடியாக கொண்டு சென்ற போதும் அவர் மரணமாகிவிட்டார். இச்சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றது,

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் நால்வரை கைது செய்து தீவிர விசாரணைக்குட்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சி

பேச்சுக்களில் சம்பந்தப்படாதோர்

# சமாதானத்தை குழப்பக்கூடாது

தொண்டா கூறுகிறார்

[கொழும்பு)

சமாதானமுயற்சிகளை குழப்பக்கூடிய நடவடிக்கைகள் குறித்து அமைச்சர்தொண்டமான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் கூறுகையில: தற்போதைய பேச்சுவார்த்தைகளை குழப்பக்கூடிய பொறுப்பற்ற கருத்துக்கள வெளியிடப்படுவது தவிர்க்கப்படவேண்டும். பேச்சுக்களில் சம்பந்தப்பட்டவர்கள தவிர ஏனையோர் இது பற்றி கதைப்பதை நிறுத்த வேண்டும்.

முன்னைய தலைவர்களுடன் ஒப்பிடும்போது இனப்பிரச்னை தீர்வுக்கு திருமதி சந்திரிகா மட்டுமே சமாதான முயற்கள எடுத்துள்ளார். அவரது முயற்சிகள்தொடர அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்,

ஆனல்புலிகள்சரணடைந்து விடுவார்கள் என்று எவரும் எதிர்பார்க்க முடியாது. அர

(5ம் பக்கம் பார்க்க[

பிலிப்பைன்ஸில் 18 பணயக் கைதிகள்

# வெட்டிக் கொலை

(மணிலா)

பிலிப்பைன்ஸில் முஸ்லிம் தீவிரவாதிகள் தாம் பிடித்துச்சென்ற 18 பணயச்கைதிகளை வெட்டிக்கொலை செய்துள்ளதாக இந்த தாக்குதல் சம்பவத்தில் உயிர் தப்பிய ஒருவர் தெரிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸின் தென்பகுதியில் அரசுக்கு எதிராக போரிட்டு வரும இந்தமுஸ்லிம் தீவிரவாதிகள் இராணுவத்தினரின் தாக்குதலிலிருந்துதப்பி ஓடிய போது 19 பேரை பணயமாக பிடித்துச் சென்றனர்.

இவர்களை காடொன்றுக்குள் கொண்டுசென்ற தீவிரவாதிகள் தம்மிடமிருந்த கூரிய வாள்களால் அனைவரையும் துண்டதுண்டமாக வெட்டிக்கொலை செய்தனர். அந்தத் தாக்குதலிலிருந்து ஒருவாறு தப்பிய ஒருவரே இத்தகவலை தெரிவித்தார். சி

# தேசிய ஆங்கில சான்றிதழ் எழுத்துப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தேசிய ஆங்கில சான்றிதழ் (N. C. E.) பகுதி 1க்கான எழுத்துப் பரீட்சை எதிர்வரும் ஜூன் மாதம் 24ம் திகதி போதிய பரீட்சார்த்திகள் இருப்பின் யாழ்ப்பாணத்தில் அமையும் நிலையத்திலும் நடைபெறும் என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

இதுசம்பந்தமான விபரங்களை யாழ். வலயம் 1 கல்வித் திணைக்களத்தில் பார்வையிடலாம். பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 20ம் திகதி காலை 11-00 மணிக்கு முன் இத்திணைக்களத்தில கையளித்தால் இவற்றைப் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என யாழ். கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது. இ

எங்கள் வாழ்விலும்
எங்கள் மனங்களிலும்
நிலைத்து நிற்கும்
அன்னை பூபதியே!
உன் தியாகத்தை எண்ணிப் பார்க்கிறோம்.

சிவா ஸ்ரோர்ஸ்

இந்துக் கல்லூரி சந்தி,
425, கே. கே. எஸ். வீதி. யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்திலும் திருநெல்வேலியிலும் எமது நிறுவனங்கள் செயல்பட்டுவருகின்றன

அன்னைபூபதிதாயகத்தின்விடிவுக்காகதன்னை அர்ப்பணித்தார்
அன்னாரை நினைவுகூருவது எம் கடமை

ஆங்கில மருந்து சில்லறை மொத்த விற்பனையாளர்கள்

குறிஞ்சி மருந்தகம்

தலைமையகம்:
பலாலி வீதி திருநெல்வேலி

கிளை:
558 கேணல்கிட்டுசாலை, யாழ்ப்பாணம்

நாளும் பொழுதும் தன்னை தமிழ் மண்ணுக்கு உரமாக்கி ''தமிழ் ஈழம் மலருமென'' உயிர்நீத்த

அன்னை பூபதியை ஆண்டாண்டு காலம் நினைவு கூருவோம்

லிங்கம் குளிர்களி நிலையம்

(லிங்கம் கூல்பார்)

வெலிங்டன் சந்தி - யாழ்ப்பாணம்

# காணமல்போனோர் பற்றி மட்டக்களப்பில் விசாரணை

(மட்டக்களப்பு)

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஆட்கள் பலவந்தமாக கடத்திச் செல்லப்பட்டமை அல்லது காணமல் போனமை பற்றி விசாரிப்பதற்கென நியமிக்கப்பட்ட ஜனாதிபதிஆணைக் குழு எதிர்வரும் 24ம் திகதி தொடக்கம் மட்டக்களப்பில் அதன் பகிரங்க அமர்வுகளை நடாத்தும்.

மட்டக்களப்பு வில்லியம் ஒல்ட் ஞாபகார்த்த மண்டபத்தில் இந்த பகிரங்க விசாரணை அடுத்த மாதம் 5ம் திகதிவரை நடைபெறும். 1990 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 5ம் திகதி வந்தாறுமூலையிலுள்ள கிழக்கு பல்கலைக்கழகத்தில் சுற்றிவளைத்து தேடுதலின்போது இடம் பெற்ற சம்பவம் பற்றி ஆணையாளர்கள் விசாரிப்பார்கள்.

அன்றையதினம் கைது செய்யப்பட்ட 145 பேருக்கு என்ன நடந்தது என்பது இன்னமும் தெரியவில்லை. 1990ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9ம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தன்னிச்சையடி, பிள்ளையாரடி, கொக்குவில் சத்துருக்கொண்டான் ஆகிய கிராமங்களில் இளைஞர்களும், வயோதிபப் பெண்களும் சுற்றிவளைத்து தேடுதலகளுக்கு உள்ளாக்கப்பட்டபோது இடம்பெற்ற சம்பவங்கள் பற்றியும் ஆணைக்குழு விசாரிக்கும்.

இவர்கள் அனைவரும் தற்போது எங்கு வைக்கப்பட்டுள்ளார்கள் என்பதனை கண்டறிய ஆணைக்குழுவினர் முயற்சியெடுப்பர்.

சாட்சியம் அளிக்கவிரும்பும் அனைவரும் 25ம் திகதி செவ்வாய்க்கிழமை வில்லியன் ஒல்ட் ஞாபகார்த்த மண்டபத்தில் ஆணைக்குழுவின் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றார்கள். சி-க

## இராசி பலன்

19-04-1995

புதன் கிழமை

**(தமிழுக்கு சித்திரை - 05)**

சதுர்த்தி மு ப. 9-22 வரை கேட்டை மு. இ. 9-13 வரை சித்தயோகம், இராகுகாலம் நண்பகல் 12-02 முதல் 1-32 வரை சுபநேரம் மாலை 4-32 முதல் 6-32 வரை

மேடம்: குடும்பவிவகாரம், பயனற்ற செய்ல், யோசனை

இடபம்; தொழில் லாபம், பிறர் அறிவுரை, மனக்களிப்பு

மிதுனம்: வசதி வாய்ப்பு, கௌரவம், விருந்துபசாரம்

கடகம்: பேச்சுவார்த்தை, குழப்பநிலை, பணமுடை

சிங்கம்; விரோத சிந்தனை, குடும்பபிரிவு, அலைச்சல்

கன்னி: தொழில் சிறப்பு, கலந்துரையாடல், விவேகம்

துலாம்: மனக்குமுறல், சகோதரி வன்மம், அகால உணவு

விருச்சிகம்; விரோதிகளை ஜெயித்தல், பணவரவு, பயணம்,

தனுசு: தொழில் மந்தம், தைரியமின்மை, புத்திரர் கவலை

மகரம்: எதிர்பாராத நன்மை, நண்பர் சகவாசம், கலகலப்பு

கும்பம்: இனியசம்பாஷணை, குடும்ப சுகம், கலைஞானம்

மீனம்: வீண்பழி, மன வெறுப்பு, நீண்டகால பிரச்னை

— ஜோஸ்யர்

## பலதும் பத்தும்

### கவலையைப் போக்க

கவலை ஏற்பட்டால்... அதனைப் போக்கும் வழிகளைப் பற்றித்தான் சிந்திக்கப் பழகவேண்டும். அதை விடுத்து... கவலையிலேயே மூழ்கிவிட்டால்...?

கவலையும், நெருக்கடி மனோநிலையும் உடனடியாக வயிற்றைத் தான் பாதிக்கும். புண் ஏற்படும்; வலி ஏற்படும்; சிலசமயம் இரத்தக் குழாய்கள் வெடித்து இரத்த வாந்தியும், இரத்த பேதியும் ஏற்படும். இரத்த அழுத்தம் கவலையின் இன்னோர் பரிசு.

தலைவலி, முதுகுவலி, வயிற்றுப் புரட்டல் எல்லாம் நெருக்கடி மனோநிலையின் உடன்பிறப்புக்கள் என்கிறார் மனோதத்துவ நிபுணர்.

நம்மை நோக்கி நாமே நகைக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். துன்பம் வருங்கால் நகுக! என்றுதானே வள்ளுவரும் ஆலோசனை வழங்கினார்?

— மயூரன்

### அரைத்த உப்பின் விலை குறைப்பு

(அரியாலை)

யாழ்- மாவட்டத்தில் மீனவர்களின் நன்மை கருதி கூடுதலாக்கப்படும் மீன் வகைகளை பதனிட்டு வைப்பதற்காக தமிழீழ பொருண்மியமேம்பாட்டு நிறுவனகைத்தொழில் பகுதி அரைத்த உப்பின் விலையை 10ரூபாய் 50சதத்திலிருந்து 9ரூபாயாகக் குறைந்துள்ளது. கடற்றொழில் சங்கங்கள் மூலமாக அரைதத உப்பை பெறலாமெனவும் தெரியவருகின்றது. 59

### எழுதுவினைஞருக்கு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

புதிய சம்பள விபரம் பின்வருமாறு;

46320-8X1200- 7X 1560-66,840 ஆகும்-

இது சம்பந்தமான சுற்றுநிருபம் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 71-சி

### பேச்சுக்களில்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சுகருகு கொள்கைகளும் கடப்பாடுகளும் இருப்பது போன்று புலிகளுக்கும் கொள்கைகளும் கடப்பாடுகளும் உண்டு. எனவே அடுத்த நடவடிக்கைகளை பொறுத்துத்தான் பார்க்கவேண்டும் எனவும் கூறியுள்ளார். - சி

அன்னை பூபதி பொது அறிவுத் தேர்வு

## யாழ். கோட்டத்தில் பரிசு பெறுவோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

அன்னை பூபதி பொது அறிவுத் தேர்வில கோட்ட மட்டத்தில் பரிசு பெறுவோர் பட்டியல் வருமாறு:

யாழ்ப்பாணக் கோட்டம்

ஆண்டு — 6

உபயசேகரம் - செந்தூரன் பரியோவான் கல்லூரி, செல்வன் சி. அன்ரன் - பரியோவான்கல்லூரி, கார்த்திகா - அச்சுதமபிள்ளை திருக்குடும்ப கன்னியர்மடம்.

ஆண்டு — 7

குமரகுருநாதன் - பிரதீபன் பரியோவான் கல்லூரி, சிவபாலன் - பிரணவன் பரியோவான் கல்லூரி, கருணாகரன் - பாலமுருகன் பரியோவான் கல்லூரி,

ஆண்டு - 8

இரஜந்தி - இராமச்சநதிரன் வேம்படி மகளிர் கல்லூரி, டீ. எம். ஆர் லக்ஸ்மன் சம்பத்திரிசியார் கல்லூரி, நீரஜா - தியாகராஜா வேம்படி மகளிர் கல்லூரி.

ஆண்டு - 9

மனோரதி - மனோகரன் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, ஸ்ரீசாந்தினி - நல்லநாதன் வேம்படி மகளிர் கல்லூரி, லதாங்கி - மிக்ருஞ் ஜெயம் வேம்படி மகளிர் கல்லூரி

ஆண்டு - 10

செல்வநாயம் - தர்மசீலன் பரியோவான் கல்லூரி, கிறிஸ்ரா நிஷாந்தினி அன்ரன் வேம்படி மகளிர் கல்லூரி, ரம்யா - இரட்ணசிங்கம் வேம்படி மகளிர் கல்லூரி

ஆண்டு - 11

சிவகௌரி - யோகலிங்கம் வேம்படி மகளிர் கல்லூரி, தில்லையம்பலம் - விஸ்வேதிதன் பரியோவான் கல்லூரி, சிவஞானசுந்தரம் - சிறீநீதன் பரியோவான் கல்லூரி.

ஆண்டு — 12, 13

கஸ்தூரி - சச்சிதானந்தம் வேம்படி மகளிர் கல்லூரி, சர்மிலி - சின்னத்தம்பி வேம்படி மகளிர் கல்லூரி, குணரத்தினம் பிரதீபன் பரியோவான் கல்லூரி.

மேதினத்தின் மேன்மையினை காதினிக்க பறைசாற்று


## அறிவித்தல்

யாழ் / அரசினர் பொது வைத்தியசாலையில் வைத்தியர்களுக்குரிய உள்ளகப் பயிற்சி 26-04-95ல் ஆரம்பிக்கப்பட இருப்பதாக கொழும்பு சுகாதார அமைச்சு பணிப்பாளர் நாயகம் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே இவ் வைத்தியசாலையில் உள்ளகப் பயிற்சி மேற்கொள்வதற்கு விருப்பத்தை தெரிவித்த வைத்திய உத்தியோகத்தர்கள் உள்ளகப் பயிற்சி நெறியை தொடர்வதற்கான சில ஆயத்தங்களை செய்வதற்கு 20-04-95 காலை 9-00 மணிக்கு பணிப்பாளர் பணிமனையில் சமூகமளிக்கும்படி வேண்டுகிறேன்.

நன்றி

(எ- 4885) பணிப்பாளர்



தற்கொடையாளி

அன்னை பூபதி நினைவு பொது அறிவுத்தேர்வு-1995

## பரிசளிப்பு விழா

தற்கொடையாளி அன்னைபூபதி நினைவாக விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் பாடசாலைகளில், ஆண்டுதோறும் நடாத்தப்பட்டுவரும் அன்னை பூபதி நினைவு பொது அறிவுத்தேர்வில் தோற்றி இந்த ஆண்டு சிறப்புத்தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா அன்னைபூபதி நினைவுநாளான 19-4-95 இன்று நடைபெறுகிறது.

இடம்:- அன்னைபூபதி கலையரங்கம். உரும்பராய்
காலம்:— 19-04-95 காலை 9 மணி
தலைமை;- செல்வி வாசுகி
(விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு மகளிர் பிரிவு பொறுப்பாளர்)

பல விருந்தினர்கள் சிறப்புரையாற்றவுள்ளனர்

பரிசு பெறும் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், பெற்றோர்கள் அனைவரையும் வருகை தந்து இவ் விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- பரிசுபெறும் மாணவர்கள் காலை 8-30 மணிக்கு முன்னர் உரும்பராய் சந்தியில் உள்ள சிவகுமாரன் நினைவுப் பூங்காவுக்கு வருகை தரவும்

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு

(ஏ- 4884)



அஹிம்சைப் போரில் தன்னைத் தற்கொடையாக்கி
ஆண்டுகள் ஆறு சென்றாலும் உன் தியாகம்
தமிழ் நெஞ்சங்களில் நிலைத்து நிற்கும்.

நதியா நகை மாடம்

02, சந்தோஸம் வீதி, யாழ்ப்பாணம்.



அன்னையர் திலகமே! அணையாத தீபமே!

அன்னை பூபதி

என்றும் உங்களை மறவோம்

பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. சங்கம்

பண்டத்தரிப்பு



இதயங்களிலெல்லாம் நெஞ்சக்கனலை விதைத்த அன்னை பூபதியை நெஞ்சார நினைவுகூருவோம்!

அனைத்து ஆங்கில மருந்துவகைகளையும்

ஒரே ஸ்தாபனத்தில் பெற்றுக்கொள்ள நியாய விலைக் கடை

ஜீவா மருந்தகம்

சேர். பொன் இராமநாதன் வீதி
திருநெல்வேலி
வளாகம் முன்பாக

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
யாழ்ப்பாணம்.
18, ஏப்ரல் 1995.

கனம் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா,
சிறீலங்கா ஜனாதிபதி,
ஜனாதிபதியின் செயலகம்,
கொழும்பு

உங்களது, 12 ஏப்ரல் 1995 திகதியிடப்பட்ட கடிதம் கிடைத்தது. நன்றி.

உங்களது கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை மிகவும் கவனமாகவும், ஆழமாகவும் பரிசீலனை செய்தோம் நாம் எழுப்பிய முக்கிய பிரச்சினைகள் சம்பந்தமாக நீங்கள் தெரிவித்த பதிலுரைகள் எமது எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யத் தவறியமையால் நாம் மிகவும் அதிருப்தி அடைந்துள்ளோம்.

கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக நிகழ்ந்த கருத்துப் பரிமாற்றம் மூலம், உங்களுக்கு உண்மை நிலையை எடுத்துரைத்து, அதன் பலாபலன்வாயிலாகப் பொருளாதாரத் தடைநீக்கம் என்ற ஆக்கபூர்வமான முடிவை மட்டும் உங்களிடமிருந்து நாம் பெறமுடிந்தது. இந்த முடிவானது 24மார்ச் 1995 திகதியிடப்பட்ட உங்களது கடிதத்தில்தெரிவிக்கப்பட்டபோதும், அதை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் திட்டமிடப்பட்ட முறையில் காலம் தாழ்த்தப்பட்டது. நாம் விதித்த காலக்கெடுவை முறியடிக்கும் நோக்கிலேயே இந்தத் திட்டமிட்ட இழுத்தடிப்பு நேர்ந்திருக்கிறது.

நாம் முன்வைத்த மற்றைய பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட மட்டில் உங்களது பதிலுரைகள், மழுப்பல்களாகவும், நழுவல்களாகவும், எதிர்காலப் பேச்சுக்களில் முடிவெடுக்க வேண்டியவையாகவும் அமையப் பெற்றுள்ளன.

மீன்பிடி சம்பந்தப்பட்ட மட்டில் ஒரு சில தளர்வுகள் மட்டும் செய்யப்பட்டிருக்கிறது. ஆயினும், பெரும்பகுதிக் கடற்பரப்பில் மீன்பிடிக்க தடைகள் தொடர்ந்து இருக்கவே செய்கின்றன 24 மார்ச், 1995, திகதியிடப்பட்ட உங்களது கடிதத்தில் மீன்பிடிமீதான சகல தடைகளும் நீக்கப்படுமென நீங்கள் உறுதியளித்திருந்தும் தடைகள் முற்றாக நீங்கவில்லை.

பூநகரி இராணுவ முகாமை அகற்றி யாழ்ப்பாணத்திற்கு பாதையை திறந்துவிடுதல், கிழக்கு மாகாணத்தில் எமது ஆயுதப் போராளிகளின் நடமாட்டம் ஆகிய அதிமுக்கிய பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட மட்டில் உங்களது முடிவுகள் எமக்கு ஏற்புடையதாக இல்லை. எதிர்காலப் பேச்சுக்களின்போது இவை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லப்படுவதை நாம் ஏற்கமுடியாது.

இந்த முக்கிய பிரச்சினைகளை ஓரம் கட்டிவிட முனையும் எத்தனிப்பு ஒன்றைத் தெளிவாக காட்டுகிறது அதாவது உண்மையான சமாதானத்தையும் இயல்புநிலையையும் தோற்றுவிக்கும் நோக்கமெதுவும் உங்களது அரசிடம் இருப்பதாக தெரியவில்லை. பதிலாக இராணுவத்தின் நலன்களை பேணுவதிலேயே நீங்கள் அதீத அக்கறை காட்டுகிறீர்கள். அது மட்டுமன்றி மோதல் தவிர்ப்பு ஒப்பந்த சூழ்நிலையை உங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி ஆயுதபடையினரின் பலத்தைக்கட்டியெழுப்புவதில் தான் அரசு கவனம் செலுத்துகிறது என்பதை நாம் ஐயுறவின்றி காணக்கூடியதாக இருக்கிறது. இருதரப்பினரும் இராணுவ சமபலத்தை பேணவேண்டும் என்ற மோதல் தவிர்ப்பு ஒப்பந்த விதியை இந்நடவடிக்கை மீறுவதாக அமைகிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புறேன்.

19 ஏப்ரல் 1995 என்று நாம் விதித்த காலக்கெடுவினுள், அந்தக் கால அவகாசத்தினுள், மேற்குறிப்பிட்ட எமது கோரிக்கைகள் எதையும் நீங்கள் நிறைவு செய்யத் தவறியமையால், நாம் ஏற்கனவே தெரிவித்ததுபோல இத்திகதியிலிருந்து சமாதானப் பேச்சுக்களிலிருந்தும், மோதல் தவிர்ப்பு உடன்பாட்டிலிருந்தும் விலகிக்கொள்வதென்ற வேதனைக்குரிய முடிவை எடுத்துள்ளோம். இந்த முடிவை எடுப்பதைத் தவிர எமக்கு மாற்றுவழி எதையும் நீங்கள் விட்டுவைக்கவில்லை. இந்தத் துரதிர்ஷ்டமான சூழ்நிலை குறித்து நாம மிகவும் வருந்துகிறோம்.

உங்கள் நேர்மையுள்ள
வே. பிரபாகரன்,
தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

### கார் விபத்தில் சிக்கி

# வடபகுதி இளைஞர் பிரான்சில் பலி

(அரியாலை)

பிரான்சில் தொழில் புரிந்து வந்த யாழ். இளைஞர் ஒருவர் கடந்த 14ந் திகதி வெள்ளிக்கிழமை அங்கு நடைபெற்ற கார் விபத்தொன்றில் சிக்கிப்பலியானார்

இத்தகவலை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் 17ம்திகதி அவரது பெற்றோருக்கு அறிவித்தது. யாழ். அர்ச்சுனவீதி இராசாவின் தோட்டத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை எட்மன் (வயது 39) என்பவரே இவ்விபத்தில் பலியானவராவர்.

இவர் 15 வருடங்களுக்கு முன்பு பிரான்ஸுக்கு சென்றவரென்றும் தெரிவிக்கப்பட்டது. 59-இ

# இல. பெண்ணின் சடலத்தை

## எடுத்துவர முயற்சி

(கெய்ரோ)

ஐக்கிய அரபுக் குடியரசில் மரணதண்டனை விதிக்கப்பட்ட இலங்கைப் பெண் ஒருவருக்கு நேற்று மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

தான் வேலைசெய்த வீட்டின் முதலாளியின் 4 வயதுக் குழந்தையை கொலைசெய்த குற்றத்துக்காக இலங்கைப் பெண்ணுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது தெரிந்ததே

மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட இலங்கைப் பெண்ணின் இறந்த உடலை, இலங்கைக்குக் கொண்டுவருவதற்கு இலங்கையிலுள்ள முஸ்லிம் நீதிமன்றம் முயற்சிகளை மேற்கொவ்வதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (வி-இ)

## 14 படகுகளில் வந்த

### இந்திய மீனவரைக் காணவில்லை

(சென்னை)

இராமேஸ்வரத்தில் இருந்து 14 படகுகளில் சில தினங்களுக்கு முன் மீன் பிடிக்கச் சென்ற 48 மீனவர்கள் இதுவரை திரும்பி வரவில்லை என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இம்மீனவர்கள் என்னவானார்கள் என்பது குறித்தும், இவர்களை மீட்பதற்கான உரிய நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ளுமாறும் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர் சங்கங்கள், பிரதமர் நரசிம்மராவுக்கு அவசரத் தந்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளன.

இது விடயத்தில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சு இலங்கை அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு, இது போன்ற சம்பவங்கள் மீண்டும் ஏற்படாவண்ணம் நடவடிக்கைமேற்கொள்ளுமாறும் மேற்படி சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. க இ

### பிரிவுபசார விழா

[மானிப்பாய்]

யாழ் செயலக கணக்குக் கிளையில் நீண்டகாலமாக லிகிதராக பணியாற்றி இம்மாதத்துடன் மட்டக்களப்பு படுவான்கரை பிரதேச செயலகத்திற்கு இடமாற்றலாகிச் செல்லும் இ. கைலாயபிள்ளைக்கு யாழ் செயலக பிரதம கணக்காளர் சு. சிவபாலன் தலைமையில் பிரிவுபசாரவிழாவொன்று கணக்குக்கிளை ஊழியர்களால் நடத்தப்பட்டது. 71

### தபால்களை இன்று சேர்ப்பிக்கவும்

(யாழ்ப்பாணம்)

நாளை 20ம் திகதி காலை 7-30 மணிக்கு பருத்தித்துறையில் இருந்து 'சீ டான்ஸர்' கப்பல் மூலம் கொழும்பு மற்றும் வெளி இடங்களுக்கான கடிதங்கள் அனுப்பப்பட உள்ளன.

கடிதங்களை அனுப்ப விரும்புவோர், தங்கள் கடிதங்களை இன்று 19ம் திகதி மாலை 4-00 மணிக்கு முன்னர் யாழ்ப்பாணம் பிரதம அஞ்சலகத்தில் உள்ள தபாற் பெட்டியில் சேர்க்குமாறு யாழ். பிரதம அஞ்சலகம் அறிவித்துள்ளது. இ

# சமாதானம் பற்றியசெய்திகள்

## மக்களைக் குழப்பத்திலாழ்த்துகிறது

(கொழும்பு)

சமாதான பேச்சுவார்த்தையின் பல்வேறு நிகழ்வுகளும் மக்கள் மத்தியில் பல்வேறு விதமான அபிப்பிராயங்களை உருவாக்கி வருகின்றன. சமாதான முயற்சிகளின் நத்தை வேகமும் அதன் பலாபலன்கள் மக்களை சென்றடைவதில் உள்ள தடைகள் மக்கள் மத்தியில் ஒரு குழப்பநிலையை ஏற்படுத்தி வருகிறது.

இவ்வாறு கொழும்பு பத்திரிகை ஒன்றுதெரிவித்துள்ளது. அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில்

பல நூற்றுண்டுகால பிரச்னையை தீர்த்து வைக்க முயலும் போது முரண்பாடுகள் தோன்றுவது ஒன்றும் புதுமையான விடயமல்ல. ஆனாலும்இயன்றளவு ஆயுதபலத்தை அடிப்படையாக கொண்டு முரண்பாடுகளை தீர்க்க முனைவது மேலும் முரணபாடுகள் வளர்வதற்கே வழி வகுக்கும்' ஆனபடியால் நாம் இயன்றளவு முரண்பாடுகளை தவிர்த்து புரிந்துணர்வை மேற்கொள்வோ மேயானால் நிச்சயமாக எமது சமாதானப் பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்கும்.

இந்த சமாதானப் பயணம் ஆமை வேகத்தில்அமைந்திருந்தாலும் கூட உறுதியானதாகவும் நிரந்தரமானதாகவும் வேண்டும இதற்கு அரசியல் கட்சிகள் மத்தியில் புரிந்துணர்வு ஏற்படுவது அவசியமானது எனவும் குறிப்பிட்டுள்ளார். சி

### தீர்வை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்களுக்கான தீர்வு எதையும் இதுவரை முன்வைக்கவில்லை சிங்கள அரசியல்வாதிகள் எதையெல்லாம்தருவோம் என்று வாக்குறுதிகளைத் தருவதில் வல்லவர்கள் ஆனால் அவர்கள் தமது வாக்குறுதிகளை நிறைவேற்றியது கிடையாது

ஜனாதிபதி சந்திரிகா அரசு, தமிழர்களுக்கு சிறுசிறு சலுகைகளை தருகின்றதே தவிர, தமிழர்களின் உரிமைகளை வழங்குவதில் இதுவரை எந்த ஒரு முயற்சியிலும் ஈடுபட்டது கிடையாது.

இந்தநிலையில் தாம் ஒரு வலுவான நிலையில் இருந்து கொண்டால்தான் தமது உரிமைகளைப்பெற முடியுமென்று தமிழர் நினைப்பதில் என்ன தவறு இருக்கிறது', என்று தெரிவிததார். (வி-இ)

### கண்டெடுக்கப்பட்ட பொருட்கள்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் காவல்துறையினரால் கையளிக்கப்பட்ட கீழ்க் குறிப்பிடப்படும் பொருட்கள் சுன்னாக தமிழீழ மாவட்ட நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரிமையாளர்கள் ஆதாரங்களைக் காட்டிப்பெற்றுக் கொள்ளும்படி குறித்த மன்றின் நீதியாளர் அறியத் தந்துள்ளார்.

பெர்ருட்களின் விபரம்:

ஒரு தொகைப்பணம் (பேஸ் உடன்) கைச்சங்கிலி ஒன்று, கைக்கடிகாரம் இரண்டு, திறப்புக்கோவை ஒன்று, பணப்பை சிறியது ஒன்று, பேனா ஒன்று, திறப்பு ஒன்று, பேருந்து பயணச்சீட்டு.

### தியாகி அன்னை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட ஆங்கில மருந்து வணிகர்கள் மற்றும் சகல வணிக நிலைய உரிமையாளர்கள் ஊழியர்கள் உட்பட பெருந் தொகையான ஆண்கள் பெண்கள் கலந்து கொண்டனர்.

நேற்றுக் காலை 7 மணிக்கு விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பைச் சேர்ந்த செல்வி மாங்கனி ஈகைச் சுடரை ஏற்றி வைக்க, அன்னை பூபதியின் உருவப் படத்திற்கு யாழ். மாவட்டப் பொறுப்பாளர் திரு. செந்தமிழன் மலர் மாலை அணிவித்து உண்ணாவிரதத்தை ஆரம்பித்து வைத்தார். உண்ணாவிரதத்தை அடுத்து யாழ். நகரிலுள்ள சகல வர்த்தக நிறுவனங்களும் குளிர்பானம் மற்றும் தேநீர்ச் சாலைகளும் மூடப்பட்டிருந்தன.

அன்னை பூபதி 7ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, இன்று 19ம்திகதி புதன்கிழமை வர்த்தக விடுமுறைத் தினமாகும் என யாழ். வணிகர் கழகம் அறிவித்துள்ளது. 162 இ

### தடை நீக்கிய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் என்றும், ஏனைய பொருட்கள் தடையின்றி அனுப்பி வைக்கப்படும் என்றும், இது சம்பந்தமான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

இது சம்பந்தான வர்த்தமானி அறிவித்தல், நேற்று முன்தினம் வெளியாகக்கூடும் என ஏற்கனவே செய்திகள் வெளியானதும் தெரிந்ததே. க இ

### அன்னை பூபதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எங்கும் அன்னைபூபதியின் உருவப்படம் வைககப்பட்டுள்ளதுடன் வீதிகள் தோறும் மஞ்சள் - சிவப்பு நிறக்கொடிகளும் கட்டப்பட்டு அஞ்சலி செலுத்தப்படுகின்றது.

அன்னையின் நினைவாக இன்று யாழ். மாவட்டத்தில் கோட்ட ரீதியாக அடையாள உண்ணாவிரதங்களும் நினைவுப் பொதுக் கூட்டங்களும் நாள் பூராவும் நடைபெறவுள்ளன. வி-இ

### கப்பல் பயணிகள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 25ம் திகதி கப்பலில் பயணம் செய்வதற்கு யாழ் செயலகத்தில் ஆசனம் உறுதிசெய்யப்பட்டவர்கள் இன்றும் நாளையும் யாழ். செயலகத்தில் வந்து தங்கள் பணத்தை செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளலாம்.

நாளை 20ம் திகதி கப்பலில் பயணம் செய்ய பதிவுசெய்த பயணிகள் அன்று காலை 8மணிக்கு பருத்தித்துறை துறைமுகத்தில் சமூகம் கொடுக்குமாறு யாழ். செயலகம் அறிவித்துள்ளது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 19ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Neaws paper at the General Post office Sri Lanka under Licence number B/1633613,